திரு. ரா. ரா. முனுசாமி: தலைவரவர்களே, சாத்தனூர் அணைத் தண்ணீரை, நந்தன் கால்வாய் முடிந்தவுடன் அதில் கொண்டு வந்து சேர்ப்பதற்கான ஆலோசனை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. தனிக்கேள்வி போடவும்.

பாலாற்றுப்படுகையிலுள்ள கிணறுகள்.

* 570 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

பாலாற்றுப் படுகையில் கிணறுகளில் மின்விசை அமைத்துத் தண்ணீர் இறைக்கத் தடை விதிக்கும் சட்டத்தினை ரத்து செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, பாலாற்றுப் படுகையிலே மின்சார இயந்திரத்தை அமைத்துத் தண்ணீர் எடுக்கக் கூடாது என்று விதி முறை வகுக்கப்பட்டிருக்கிறது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சில நேரங்களில் பாலாற்று படுகை 15 மைலுக்கு இடையே கூட.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியாகப் போடுங்கள்.

திரு. கே. எ. வகாப்: கேள்வி தான். மின்சார இயந்திரத்தை பாலாற்றுப் படுகையில் போடுவதற்கு அனுமதி அளிப்பது இல்லை. இதற்குக் காரணம் என்ன என்று ஆராயும்போது, அந்த ஆற்றில் தண்ணிர் வருவது இல்லை என்பது தான். ஆகவே, பாலாற்றில் தண்ணீர் வரவழைப்பதற்காக, இந்தக் காவிரிப் பிரச்னையோடு, இந்தப் பாலாற்றுப் பிரச்னையையும் மைசூர் அரசோடு கலந்து பேசி தீர்ப்பதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஒரு நேரத்தில் ஒரு கேள்வி போடலாம். இரண்டு மூன்று கேள்விகள் போட்டால் பதில் சொல்ல இயலாது. இந்தப் பாலாற்றுப் படுகையிலே மின்சார இயந்திரத்தைப் பொருத்தி தண்ணீர் எடுக்கக் கூடாது என்பது விதி முறையாகும். இன்டிஸ்கிரிமினேட்டாக கிணறு வெட்டுவதால், கிணறு ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் இடையில் இவ்வளவு இடை வெளி இருக்கவேண்டுமென்று விதிமுறைகள் அமைக்கப்பட்டிருக் கின்றன. இந்த விதிமுறைகள் விவசாயிகள் நலன் கருதித்தான் ஏற் படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தப் பாலாற்றுப் பிரச்னைக்கும், காவிரி நீர் பிரச்னைக்கும் தொடர்பு படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The Hon Minister's reply is very exhaustive. I am not allowing any more supplementaries. பதில் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

1971 ஜுலை 30]

(The hon. Member Thiru M. A. Latheef rose.)

MR. DEPUTY SPEAKER : Resum your seat.

(The hon. Member Thiru M. A. Latheef kept on standing).

MR. DEPUTY SPEAKER : It is not in order for an hon. Member to stand when the Chair had asked the hon. Member to resume his seat.

(The hon. Member Thiru M. A. Latheef then resumed his seat.

Houses in Todhunternagar

* 571 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the total number of houses in a Todhunternagar behind the Teashers' College in Saidapet; and

(*b*) whether there is any proposal to study the conditions and arrange for the provision of the necessary civic amenities in the colony?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) டாடண்டர் நகரில் 396 வீடுகள் உள்ளன.

(இ) இல்லை, ஐயா.

DR. H. V. HANDE : May I know whether it is a fact that, some representations were made to Government requesting the Government to appoint a Committee to go into the insanitary condition of the houses. Even if according to the Hon. Minister, no representation has been received, may I know whether Government would study the condition of the houses? Most of the houses are not in proper condition. Most of the occupants there are employees in Secretariat. May I know whether Government have any proposal to increase the number of houses since there is a lot of space there?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : I am not aware of any representation from the occupants of Todhunternagar. With regard to amenities, individual tap connections have been provided for brackish water. Drinking water supply is also being maintained. Necessary maintenance is being done. There is no propsal to study the condition.

(Mr. Speaker in the Chair.)

கோவை சிவானந்தம் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம்.

* 572 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா .—

(அ) கோவையில் உள்ள சிவானந்தம் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் தவறு நடந்துள்ளதாகவும் அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டு பங்குதாரர்களிடமிருந்து 1967-ல் விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?